தினத்தந்தி
24/09/2008

# அட்வர்டைசிங் கிளப் மெட்ராஸ் தமிழ் விருதுகள் வழங்கும் விழா

சென்னை, செப்.24– அட்வர்டைசிங் கிளப் மெட்ராஸ் சார்பாக, விளம்பரத்துறையினருக்கான தமிழ் விருதுகள் வழங்கும் விழா, இந்த ஆண்டு முதல் முறையாக நடைபெறுகிறது.

## தினத்தந்தி முதன்மை பங்களிப்பு

இந்த விழா, அக்டோபர் 1–ந் தேதி மாலை சேத்துப்பட்டில் உள்ள சர்.எம்.வி. சுப்பாராவ் ஹாலில் நடக்கிறது.

தினத்தந்தி நாளிதழ் முதன்மை பங்களிப்புடன், ஸ்டார் விஜய், ஆனந்த விகடன் நிறுவனங்கள் உடன் இணைந்து அட்வர்டைசிங் கிளப் மெட்ராஸ் இந்த விருது வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்து உள்ளது. தமிழ் நுகர்வோர்களின் மொழி, கலாசாரம் மற்றும் அடிப்படை வாழ்க்கை முறையினை மையமாக கொண்டு இந்த போட்டிகள் நடைபெற்று உள்ளது.

## 360 விண்ணப்பங்கள்

இப்போட்டிக்காக சுமார் 40 குழுமங்களில் இருந்து 360 விண்ணப்பங்கள் 26 படிநிலைகளில் பெறப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சி ஒரு முற்றிலும் மாறுபட்ட திரைப்படங்களை போல, நடனம், நகைச்சுவை, இசை போன்ற அம்சங்களை உள்ளடக்கியது.

இந்த நிகழ்ச்சி விளம்பர துறையினருக்காகவும், விளம்பர துறையில் ஆர்வமுடையவர்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் அமைய உள்ளது. டிக்கெட்டுகள் ரூ.100 வீதம் அட்வர்டைசிங் கிளப் மெட்ராஸ் மூலமாக பெறலாம். முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு அணுகவும்: டெலிபோன் எண்கள் 28141581 மற்றும் 28142250